வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 1257 /ஆ2/2023 . நாள் : 16.03.2023.

பொருள்: பள்ளிக்கல்வி – 2022–2023–ஆம் ஆண்டு அரசு/அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கான நலத்திட்டங்கள் – வழங்கப்பட்டமை TNSED Schools App–இல் மாணவர்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கப்பட்ட விவரத்திற்கான பதிவுகள் மேற்கொள்ளுதல் அறிவுரை வழங்குதல் – சார்ந்து.

பார்வை: சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநர் (தொழிற்கல்வி) அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.62598/வி2/ /இ1/2021, நாள். 13.03.,2023.

#######

பார்வையில் காணும் செயல்முறைக் கடிதத்திற்கிணங்க வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு / அரசு நிதி உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியருக்கு 2022–2023–ஆம் கல்வியாண்டிற்கான விலையில்லா புத்தகப்பை, விலையில்லா சீருடைகள், புவியியல் வரைபடப் புத்தகம், விலையில்லா வண்ணப் பென்சில் / வண்ணக் கிரையான்கள், கணித உபகரணப் பெட்டி போன்ற நலத்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்கண்ட நலத்திட்டங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட விவரத்தினை பள்ளி ஆசிரியர்கள் வகுப்பு வாரியாக தங்களின் 8 digit Teacher id ஐ பயன்படுத்தி TNSED Schools App–இல் Login செய்து Schemes Menu வை பயன்படுத்தி நலத்திட்டங்கள் விநியோகித்த பதிவுகளை மேற்கொள்ள ஆசிரியர்களுக்கு உரிய அறிவுரை வழங்குமாறு பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்க சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

16.3.23

முதன்மைக் கல்வி அலுவலருக்காக,
வேலூர்.

16/03/23

பெறுநர்

மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலை)
வேலூர் – 09.

நகல்

1. அரசு / அரசு நிதி உதவி பெறும் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.
2. பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநர்(தொழிற்கல்வி) பள்ளிக் கல்வி ஆணையரகம், சென்னை–06.
(அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

//ப.தா.//